


18 MAY 19
3L
O26m211,N57TA
N43.82

சந்தா ரூ. 2 – 0 – 0.

உ

## பொருளடக்கம்.


| | | | |
|---|---|---|---|
| திருப்புகழ் ககனமும் | 25 | சிவானந்தலஹரி | 35 |
| கந்தரலங்கார[illegible] | | சென்னிமலைச் சிறப்பு | 37 |
| [illegible] படி[illegible]ங் திருப்புகழ் | 31 | கற்பு | 40 |
| [illegible] கந்தரநுபூதி பின்னர் வரும்) | | ஸ்வரம் விறல்மார | 48 |


## இவ்வாண்டில் புதிதாகச் சேர்ந்த ஆயுள் சந்தாதாரர்கள்.

மகா கோடையாளர் (ரூ. **50—0—0.**)

ஸ்ரீமதி நாகரத்தினம்மாள்,

25 ஏகாம்பரம் தெரு, ஆலந்தூர், பறங்கிமலை, சென்னை.

உபர் கோடையாளர் (ரூ. **25—0—0.**)

ஸ்ரீமதி கண்ணம்மாள்,

*c-o P. M.* மதுரைமுதலியார் ஸ் சன்ஸ் அயர்ன் பவுண்டர்ஸ், பங்களூர் சிடி.

கோடையாளர், (ரூ. **15—0—0.**)

திரு. ஆ. சி. இராமசுப்பிரமணியபிள்ளை,

*41* தெற்குப்புதுத்தெரு, திருநெல்வேலி.

திரு. *K. C.* சபாபதிக்கவுண்டர்,

இருகலூர், மகுடஞ்சாவடி *P. O.* சேலம் ஜில்லா.

இப்புது ஆண்டில் ஆயுள்சந்தாதாரராகச் சேர்ந்த அன்பர்கட்கு, மிகுத்த கனமதுறு நீள்சௌக்கிய சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வும், தகைமை சிவஞானமும் உண்டாக இளம்பூரணனது இணையடி மலரை இறைஞ்சுகின்றோம்.

## பெரியார் பிரிவு.

*நமது அமிர்தத்தில் கந்தரநுபூதிக்குத் தொடர்பாக உரை எழுதிவந்த சைவத் திருவாளர், நெல்லை, சிந்துபூந்துறை, ரிடையர்டு தாசில்தார் மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள், சுபாநு ஆண்டு சித்திரைத் திங்கள் 1-ம் நாள் இறைவன் திருவடி நீழலடைந்தார்கள். அன்னார் பிரிவுக்கு வருந்துகின்றோம்.*

ஆசிரியர், திருப்புகழமிர்தம்.

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் முன்போற்றுந் திருப்புகழைக் கேளீர் தினம்"


| மலர் 8 Vol 8 | சுபாநு ஷ வைகாசி மீ 1உ மே 1943 | இதழ் 2. No 2. |
|---|---|---|


## திருப்புகழ்

### வள்ளிமலை

ககனமு மனிலமு மனல்புனல் நிலமமை
 கள்ளப் புலாற்கி — ருமிவீடு

கனலெழ மொழிதரு சினமென மதமிகு
 கள்வைத்த தோற்பை — சுமவாதே

யுகஇறு திகளிலு மிறுதியு லொருபொருள்
 உள்ளக்க ணோக்கு — மறிவூறி

ஒளிதிக ழுருவுரு வெனுமறை யிறுதியி
 லுள்ளத்தை நோக்க — அருள்வாயே

ம்ருகமத பரிமள விகசித நளினநள்
 வெள்ளைப் பிராட்டி — இறைகாணு

விடதர குடிலச டிலமிசை வெகுமுக
 வெள்ளத்தை யேற்ற — பதிவாழ்வே

வகுளமு முகுளித வழைகளு மலிபுன
 வள்ளிக் குலாத்தி — கிரிவாழும்

வனசரர் மரபினில் வருமொரு மரகத
 வள்ளிக்கு வாய்த்த — பெருமாளே.

## பதவுரை.

ம்ருகமத பரிமள - கஸ்தூரி மணங்கமழ்வதும், விகசித - நன்கு மலர்ந்து விளங்குவதுமாகிய, நளினநள் தாமரை மலரில் வீற்றிருக்கும், வெள்ளைபிராட்டி - வெண்ணிறத்துடன் கூடிய கலைமகளாருடைய, இறைகாணு - கணவனாகிய பிரமதேவனால் காணமாட்டாதவரும், விடதர - ஆலால விடத்தைக் கண்டத்தில் தரித்தவரும், குடில சடிலமிசை - வளைந்த சடைமுடியின் மீது, வெகுமுக - அநேக முகங்களையுடைய, வெள்ளத்தை ஏற்ற - கங்காநதியை ஏற்றுக்கொண்டவரும் ஆகிய, பதி வாழ்வே - சிவபெருமானுடைய திருக்குமாரரே! வகுளமும் - மகிழ்மரமும், முகுளித வளைகளும் - குவிந்துள்ள அரும்புகளோடு கூடிய சுரபுன்னையும், மலிபுன - மிகுந்துள்ள கொல்லைகளையுடைய, வள்ளிகுலா - வள்ளிக்கொடிகள் மிகுதியாக விளங்குகின்ற, கிரி வாழும் - (வள்ளி)மலையில் வாழ்கின்றவரும், வனசரர் மரபினில் வரும் - காட்டில் சஞ்சரிக்கும் வேடர்குலத்தில் தோன்றினவரும், ஒரு மரகத - ஒப்பற்ற மரகதநிறமுடையவருமாகிய, வள்ளிக்கு வாய்த்த பெருமாளே - வள்ளியம்மையாருக்கு கணவராக வாய்த்த பெருமையின் மிக்கவரே! ககனமும் - வானும், அனிலமும் - காற்றும், அனல் - நெருப்பும், புனல் - நீரும், நிலமமை - மண்ணும் ஆகிய ஐம்பூதங்களினாலாய, கள்ளபுலால் - கரவுடைய துர்நாற்றம் வீசுவதும், க்ருமிவீடு - புழுக்களுக்கு வீடுபோன்றதும், கனல்எழ மொழிதரு - நெருப்புப் பொறிபறக்குமாறு பேசுகின்ற, சினம் என மதம் மிகு - கோபம் என்கின்ற அகங்கார மிகுந்த, கள்வைத்த தோல் பை - மயக்கம் என்ற கள்ளைவைத்துள்ள தோற்பை போன்றதுமாகிய இவ்வுடம்பை, சுமவாதே - சுமந்து அயராமல், யுக இறுதிகளிலும் இறுதியில் - யுகாந்தங்களிலும் முடிவில்லாததும், ஒரு பொருள் - ஒப்பற்ற பரம்பொருளும், ஒளிதிகழ் அரு உரு எனும் - ஞானவொளிவீச அருவாகவும் உருவாகவும் விளங்குவதென்று கூறும், மறை இறுதியின் உள்ளத்தை - வேதமுடிவில் விளங்குவதும் ஆகிய தேவரீரை, உள்ளக்கண் நோக்கும் - அகக்கண் பார்வையால் பார்த்தும், அறிவு ஊறி - சிவஞான ஊற்று பெருகி, நோ[illegible]பார்த்து மகிழ அருள்புரிவீர்.

## பொழிப்புரை.

கஸ்தூரி மணங்கமழ்கின்றதும் நன்றாக மலர்ந்து விளங்குவதுமாகிய வெண்டாமரை நடுவில் வீற்றிருக்கும் வெண்ணிறமுடைய கலைமகளின் கணவராகிய பிரமதேவரால் காணமாட்டாதவரும், ஆலாலவிடத்தைக் கண்டத்தில் தரித்தவரும், வளைந்த சடைமுடியில் ஆயிரமுகங்களையுடைய கங்காநதியை ஏற்றவரும் ஆகிய சிவபெருமானுடைய திருப்புதல்வரே! மகிழமரமும், குவிந்த அரும்புகளை யுடைய சுரபுன்னை மரங்களும் மிகுந்துள்ள தினைப் புனங்களோடு கூடிய வள்ளிக்கொடி படர்ந்துள்ள வள்ளி மலையில் வாழ்கின்றவரும், வனவேடர் மரபில் வந்தவரும், மரகதவண்ண முடையவருமாகிய வள்ளி பிராட்டியாருக்கு மிகப் பொருத்தமாக வாய்த்த பெருநிதமுடையவரே! வான், காற்று, தீ, நீர், மண் என்ற ஐம்பூதங்களின் பரிணமத்தாலாகியதும், தீ நாற்றம் மறைந்திருப்பதும், புழுக்களுக்கு உறைவிடமும், நெருப்புப் பொறிபறக்கப் பேசும் கோபமும் மதமும் நிறைந்து அதனால் வரும் மயக்கம் என்னும் கள் வைத்த தோற்பையுமாகிய இவ் வசேதன உடம்பை இனி நான் சுமந்து அயராவண்ணம், யுகமுடிவிலும் முடியாத ஒப்பற்ற பரம்பொருளும், ஞான வொளி வீசுவதும், அருவாகவும் உருவாகவும் விளங்குவதென்று கூறும் மறைகளின் முடிவில் திகழ்வதுமாகிய செம்பொருளாகிய தேவரீரை, உள்ளக்கண்ணால் காணும் ஞானஊற்று சுரக்கத் தெரிசித்து உய்வுபெற அருள் புரிவீராக.

## விரிவுரை.

ககனமும்..........நிலமமை:—

இவ்வுடல் மண் நீர் நெருப்பு காற்று வெளி என்ற ஐம்பூதங்களின் பரிணம மாகும்.

சிவபெருமான் உலகங்கட்கெல்லாம் ஏகநாயகன். உலகமெல்லாம் அவருடைய நிலம். பிரமர் பயிர்செய்யுங் களமர். அவர் சிவபெருமான் ஏவலின்படி உலகமென்னும் வயலில் சராசரங்களாகிய விதைகளை இட்டு, தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்கு, மனிதர், தேவர் ஆகிய பயிரை வளர்த்தனர்; திருமகள் கொழுநராகிய திருமால் அப்பயிரைக் காத்தனர். விளைவு முற்றிய பின், கூற்றுவன் என்னும் பணியாளன் வந்து ஊனுடம்பை மாற்றி உயிர் என்னும் நெற்குவியலை, பூதசாரதநு என்னும் வண்டியில் ஏற்றிப் பொன்னுலகத்திற்கும், பூதமாகாதநு, என்னும் வண்டியிலேற்றி நரக உலகத்திற்கும், பூதபரிணாமதநு என்னும் வண்டியிலேற்றி மண்ணுலகத்திற்கும் அனுப்புகின்றனன். அவற்றுள் ஒரு சில உயிர்கள் இருவினையொப்பு மலபரிபாகமுற இறைவன் தனது திருவடியிற் சேர்த்து அத்துவிதானந்த முத்தியைத் தருகின்றனன். அதனை உற்றுநோக்கில் அரசன் ஆறிலொருகடமை பெறும் முறைமைபோல் விளங்குகின்றது. இந்தக் கருத்தை திருக்கழுமல மும்மணிக் கோவையில் நமது பட்டினத்துப் பிள்ளையார் திறம்பட நமக்கு அறிவிக்கின்றனர். அதனைப் படித்தின்புறுக.

பெரும்புகழ்க் காழி விரும்பு சங்கரனே
வந்தெழிற் புவன வேந்தனே யாதலின்
வளமலி நான்முகக் களமரு னேவலின்
உரம்பெறு குலவரைக் குறும்பகப் பட்ட
மண்டலம் என்னுங் கண்டநீள் வயலுட்
சராசரத் தொகுதி விராயவித் திட்டுப்
பாதவ மிருகம் பறவை மானிடர்
ஆதிப் பைங்கூ ழமைத்தனர்; சிறப்ப
மாவுறை மருமக் காவலாளர்
வளமையின் ஓம்ப விளைவு முற்றியபின்
புரியயன் பெறுவா னரிதர வியற்றி
மெய்வலிக் கூற்றுவக் கைவினை மாக்களிற்
புலாலுடை யாக்கைப் பலாலம தகற்றி
அற்றமில் உயிரெனப் பெற்றநெல் திரளைப்
பூதசாரத் தநுபூதமாகாதநு

பூத பரிணாமம் புகலுறு யாக்கை
மூவகைப் பண்டியின் மேவற ஏற்றிப்
பொன்னிலம் நிரயம் இந்நிலம் என்னும்
இடந்தொறும் ஆங்கவை அடங்கவைத்த வற்றுள்
ஒருசில வற்றைநின் திருவடி வீட்டிற்
சேர்த்தனை யன்னது கூர்த்து நோக்கில்
அரசு கொள்கடமை ஆறிலொன் றென்னும்
புரைதீர் முறைமை புதுக்கினை போலும்; அதனால்
மாசுக நீயுறும் வண்மை
பேசுக கருணைப் பெரிய நாயகனே''

''வானப் புக்குப் பற்று மருத்துக் கனல்மேவு
மாயத் தெற்றிப் பொய்க்குடி லொக்கப் பிறவாதே''
—திருப்புகழ்.

கள்ளப்புலால் கிருமிவீடு:—

புலால் - தீ நாற்றம். அது மறைந்திருப்பதால் ''கள்ளப்புலால்'' என்றனர். புழுக்கள் பல உள்ளே நெளிவதால் ''கிருமிவீடு'' என்றனர்.

''புழுக்கொள் மலக்குகை
வீடுகட்டி யிருக்கு மெனக்குநி னருள்தாராய்''
—திருப்புகழ்.

யுக இறுதிகளிலும் இறுதியில் ஒரு பொருள்:—

உலகமழியும் காலத்தை யுகம் என்பர். அப்படி பல முறை உலகமழிந்து தோன்றும். அதனால் ''யுகஇறுதிகள்'' என்று பன்மையாகக் கூறினர். அப்பொழுதும் அழியாத அநாதிமூலமாகிய பரம்பொருள் முருகவேள்.

உள்ளக்க ணோக்கும்:—

புறக்கண்ணால் கண்டு மகிழ்வதினும் அகக்கண்ணால் கண்டு மகிழ்வதுவே பரமானந்தம்.

''முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்''
—திருமூலர்.

வெள்ளைப் பிராட்டி இறைகாண:—

கலைமகளுக்குத் தலைவனாகிய பிரமதேவரால் சிவ

பெருமான் காணப்படாதவர் கலையறிவினல் காணப் படாதவர் என்பது கருத்து.

வெள்ளத்தை யேற்றபதி:—

உமாதேவியார் சிவபெருமானுடைய கண்களை மூடிய பொழுது உலகமெல்லாம் இருண்டுவிட்டது. அப்பொழுது உமையம்மையார் வெரூஉக் கொண்டனர். அதனல் திருக் கரப் பெருவிரலில் சிறுவேர்வைத் துளி உண்டாயிற்று. அது வெள்ளமாகப் பெருகி உலகையெல்லாம் அழிக்கத் தொடங்கிற்று. அதனல் உலகம் கலங்கியது. அப்பெரு வெள்ளத்தைச் சிவபெருமான் சடாமுடியில் ஏற்று உலகைக் காத்தருளினர்.

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தா லவன் சடையிற் பாய்ந்திலளேற் றரணி
யெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ

வள்ளிக் குலாத்திகிரி:—

வள்ளிகுல கிரி எனப்பிரிக்க; குலத்திகிரி என்பது குலாத்திகிரி எனத் திரிந்தது. சிறந்த வள்ளிமலை என்பது பொருள். (இது திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை யவர்கள் குறிப்புரை.) வள்ளிக்கொடி மிகுதியாக உள் ளமையால் வள்ளிமலை யெனப் பேருண்டாயிற்று.

வள்ளியம்மையார் திருவவதாரஞ் செய்த மலை. இது தொண்டைநாட்டில், திருவலம்என்ற இரயில்வே ஸ்டேஷ னுக்கு வடக்கே 8 மைலில் உள்ளது. இத்தலம் மிகப் புனிதமானது. அம்மையார் பொருட்டு முருகவேள் வந்து பலகாலம் உலாவியது. வேதாகமங்களால் காணமுடியாத வேற்பிரான் விரைமலரடிபடும் பெருமபேறு செய்தது. இயற்கைவளங் குன்ருதது. அங்குள்ள மக்கள் இன் றைக்குங் கள்ளங்கபட மற்றவர்கள்.

"சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந்தவனே"

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

(50) படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.

## பதவுரை.

பெரும் பாம்பில் நின்று நடிக்கும் - பெரிய காளிங்கன் என்னும் அரவத்தின் படத்தின்மீது நின்று கூத்தாடும், பிரான்மருகா - பெருமானாகிய திருமாலின் திருமருகரே! கொடு சூரன் நடுங்க - கொடிய சூரபன்மன் நடுங்குமாறு, வெற்பை இடிக்கும் - கிரௌஞ்ச மலையைப் பொடிபட இடித்த, கலாபம் தனி மயில்

---

"வீடுஞ்சுரர் மாமுடி வேதமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே"

—அநுபூதி.

"இமையவர் முடித்தொகையும் வனசரர் பொருப்பும் என
திதயமு மணக்குமிரு பாதச் சரோருகனும்"

"எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
யிரலைமரை யிரவுபகல் இரைதேர் கடாடவியில்
எயினரிடு மிதணதனில் இளகுதினை கிளிகடிய
இனிதுபயில் சிறுமிவளர் புனமீ துலாவுவதும்"

—வகுப்பு.

## கருத்துரை.

சிவ குமாரரே! வள்ளிமணவாளரே! புன்புலால் யாக்கையைச் சுமந்து அயராமல், தேவரீரை உள்ளக் கண்ணால் கண்டு உய்ய அருள்வீர்.

ஏறும்- தோகையை யுடையதும் ஒப்பற்றதும் ஆகிய மயில் வாகனத்தின்மீது ஏறுகின்ற, இராவுத்தனே – சேவகனே! படிக்குந் திருப்புகழ் போற்றுவன் - அறிஞர்களால் படிக்கத்தக்க தேவரீருடைய திருப்புகழைக் காப்பாற்றிப் படிப்பேன்: (ஆதலினால்) கூற்றுவன் பாசத்தினால் பிடிக்கும் பொழுது வந்து இயமன் வந்து பாசக் கயிறு வீசி எனது உயிரைப் பிடிக்குந் தருணத்தில் எழுந்தருளிவந்து, அஞ்சல் என்பாய் - பயப்படாதே என்று கூறி அடியேனை யாட்கொள்வீராக.

## விரிவுரை.

படிக்குந் திருப்புகழ்:—

எல்லோராலும் படிக்கத் தகுந்தது திருப்புகழ் என்பது இதனால் நன்கு புலனாகின்றது. பாசகரணம் பசுகரணம் நீங்கப்பெற்று பதிகரணம் வாய்க்கப் பெற்ற அருணகிரிநாத சுவாமிகள் முருகவேள் முழுமுதற்கருணை முழுதும் பெற்று, பதிஞானச் சிகரத்தின்மீதிருந்து திருப்புகழாகிய செந்தமிழ்த் திருமறையைப் பாடியருளினார். அருள்நாத ஒலியில் எழுந்த அற்புதப் பாடல் திருப்புகழ். அது உலகிலுள்ள மன்பதைகள் யாவும் பாடியுய்ய வேண்டுமென்ற பரமகருணையால் பாடப்பெற்றது.

"ஏறுமோது மாறு தீதற
நாளுசு பாடி யாடி நாடொறும்
ஈடேறு மாறு ஞான போதகம் வந்திடாதோ"

" அற்புதத் திருப்புகழ்
தேனூறவோதி எத்திசைப் புறத்தினும்
ஏடேவு ராஜதத்தினைப் பணித்ததும்" – திருப்புகழ்.

திருப்புகழைப் படிப்பவர்க்கு இடுக்கண் அணுந்துணையும் உண்டாகாது.

" இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை யறுத்திடும் எனவோதும்" - திருப்புகழ்.

திருப்புகழைப் படிக்கும் மெய்யன்பர்கட்கு சத்துரு பயம் இல்லை. அவரைப் பகைக்கும் வன்கணரை வேலாயுதம் விரைவில் அழித்துவிடும்.

" சொலற்கரிய திருப்புகழை யுரைப்பவரை யடுத்தபகை
அறுதெரிய முறுக்கியெழும் அறத்தை நிலைகாணும்"
– வேல்வகுப்பு.

திருப்புகழைக் கற்கும் புண்ணிய சீலர்க்கு அட்டமா சித்திகளும் தானே வந்து அடிமையாகிக் குற்றேவல் செய்யும்.

" வேலன் வாய்த்த திருப்புகழ் கற்றவர்
சீல மேத்திய சித்ரப்ரசித்தரே" - சித்துவகுப்பு.

" கருப்புகுத்தும் பரசமயக் கதைகேளா தநுதினமுன்
திருப்புகழைக் கற்பார்க்குச் சித்தியெட்டு மெளிதாமே"
- கந்தப்பதேசிகர்.

" வைப்பாம் அருணகிரி வாழ்த்துந் திருப்புகழைக்
கற்பார் கரையேறு வார்"
" தோத்திரம் தாகத் துதிக்குந் திருப்புகழை
ஏத்தினவர் ஈடேறு வார்"

பல பிறப்புக்களிலே சீலமுடன் ஈட்டிய நல்ல புண்ணிய மிருந்தால்தான் திருப்புகழைப் படிக்கும் பெரும் பேறு கிடைக்கும். ஆதலினால், அன்பர்கள் அனைவரும் திருப்புகழை அன்புடன் படித்துப் பயன் பெறுவார்களாக.

போற்றுதல்:—

போற்றுதல்-காப்பாற்றுதல், இது, திருப்புகழைப் படித்து, மறவாது அதனை மனதில் வைத்துக் காப்பாற்றி துதித்தலைக் குறிப்பிடுகின்றது.

கூற்றுவன்:—

உடம்பையும் உயிரையும் வேறாகக் கூறுபடுத்துபவன் ஆதலினால் இயமனுக்குக் கூற்றுவன் என்ற இப்பெயருண்டாயிற்று.

பாசத்தினால்:—

கூற்றுவன் கரத்திலுள்ள ஓர் ஆயுதம் பாசம். அது ஆருயிர்களைக் கட்டிப்பிடிக்கும் வன்மையுடையது. அப்பாசக்கயிற்றை வீசி பிராணனுடன் கட்டி இழுப்பான்.

"காவலூர் வெங்கொடுந் தூதர் பாசங்கொடென்
காலினூர் தந்துடன் கொடுபோக" - திருப்புகழ்.

ஆனால், உலகபாசம் அற்ற பக்தர்கட்கு இயமபாசம் இல்லை. பாசமுடையார்க்கே பாசமுண்டு. பாச மற்றூர்க்கு பாசமற்றே போகும்.

பிடிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய்:—

முருகப்பெருமானே! இயமன் வந்து பாசக்கயிற்றினால் என் உயிரைப் பிடித்து இழுக்கும்பொழுது தேவரீர் எனக்கு முன்னே எழுந்தருளி வந்து "அன்பனே! அஞ்சாதே, என்று கூறி யாட்கொள்வீர்.

"அந்தகனு மெனை யடர்ந்து வருகையினில்
அஞ்சலென வலிய மயில்மேல்நீ
அந்த மறலியொ டுகந்த மனிதனம
தன்பனென மொழிய வருவாயே" - திருப்புகழ்.

பாம்பினின்று நடிக்கும் பிரான்:—

கண்ணபிரான் காளிந்திநதியில் பலர்க்கும் இடுக்கண் புரிந்துகொண்டிருந்த காளிங்கன் என்ற அரவரசன் பணா மகுடத்தின்மீது நின்று இனியநாத சிலம்பு புலம்பிட இனிது திருநடனம் புரிந்தருளினர்.

பாம்பு என்பது குண்டலி சத்தி. அதன்மீது நடிப்பது என்பது பிராணவாயுவை அடக்கி நிற்பது.

"அரவுபொன் முடிமிசை
திமிதிமிதிமி யெனநட மிடுமரி மருகோனே" திருப்புகழ்.

சூரன் நடுங்க:—

சூரபன்மன் 1008 அண்டங்களுக்குந் தலைவன்; அவனுடைய ஆட்சியில், அயன் மால் இயமன் இந்திரன் முதலிய யாவரும் அடங்கி கைகட்டி வாய்பொத்தி ஏவல் செய்தனர். அத்தகைய சூரபன்மன் நடுங்க வேல்விட்டு கிரௌஞ்சவெற்பை இடித்தவராதலால், எமன் நடுங்க வருவாய் என்பது குறிப்பு.

உ

ஓம் குஹாய நம.

# சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(12-வது பக்கத் தொடர்ச்சி)

(98) ஸர்வாலங்கார யுக்தாம் ஸரள பதயுதாம்[3]

ஸாதுவ்ருத்தாம்[4] ஸுவர்ணும்

ஸத்பி[4]: ஸம்ஸ்தூயமாநாம் ஸரஸ குணயுதாம்[3]

லக்ஷிதாம் லக்ஷணட்யாம்[4]!

உத்யத்[3]பூ[3]ஷா[4] விசேஷா முபகத[3] விநயாம்

த்யோதமாநார்த[2] ரேகாம்[2]

கல்யாணீம் தேவ[3] கௌரீப்ரிய

மம கவிதாகந்யகாம் த்வம் க்ருஹாண[3] ||

## பதவுரை

| | |
|---|---|
| தேவ | — ஒளியை யுடையவரே! |
| கௌரீப்ரிய | — உமாதேவியிடம் அன்புடையவரே! |

---

லோபத் தனிமயிலேறு மிராவுத்தனே:—

முருகவேள் எல்லா வுலகங்களையும் மயிற்பரியூர்ந்து ஒரு நொடியில் வலம் வந்தாராதலின் இயமன் வரும்போது அம்மயிலின்மீது வந்தருளவேண்டும் என்று வேண்டுகின்றனர்.

இராவுத்தன்:— இது திசைச்சொல்.

" எதிரில் புலவர்க்குதவு வெளிமுகடு முட்டவளர்
இவுளி மூகின்யப்பொருத ராவுத்தனனவனும் – வகுப்பு.

## கருத்துரை.

திருமால் மருகரே! மயில்வாகனரே! திருப்புகழைப் படித்து பணிவேன்; என்னை காலன் பற்றுங் காலத்தில் வந்து "அஞ்சல்" என்று அருள் புரிவீர்.

த்வம் — தேவரீர்
ஸர்வாலங்கார யுக்தாம் — எல்லா உவமை முதலிய அணிகளுடன் கூடினதாயும், ஆடை யாபரணங்கள் முதலிய எல்லாவற்றுடன் கூடினவளாயும்,
ஸரள பதயுதாம் — எளிதான சொற்களுடன் கூடினதாயும், மென்மையான அடியும் நடையும் உடையவளாயும்,
ஸாதுவ்ருத்தாம் — சிறந்த வஸந்ததிலகம் முதலான விருத்தங்களை யுடையதாயும், மேன்மை தங்கிய விருத்த நடைகளை யுடையவளாயும்,
ஸுவர்ணாம் — உயர்ந்த எழுத்துக்களை யுடையதாயும் நல்ல நிறத்தை யுடையவளாயும்,
ஸத்பி: — புலவர்களால், ஆன்றோர்களால்,
ஸம்ஸ்துயமானாம் — துதிக்கத்தக்கதாயும், கொண்டாடத் தக்கவளாயும்,
ஸரஸ குணயுதாம் — பக்தி முதலிய ரஸங்களுடனும் இனிமை முதலிய குணங்களுடனும் கூடினதாயும், சிருங்காரம் முதலிய ரஸங்களுடனும் ஔதாரியம் முதலிய குணங்களுடனும் கூடினவளாயும்,
லக்ஷிதாம் — லக்ஷியப்பொருளை யுடையதாயும், குறிப்பிடப் பட்டவளாயும்,
லக்ஷணாட்யாம் — காவிய லக்ஷணங்களோடு நிறைந்ததாயும் உத்தம லக்ஷணங்களோடு நிறைந்தவளாயும்
உத்யத்பூஷா விசேஷாம் — ஒளிர்கின்ற சப்தாலங்காரத்தை யும் ... யும், ஒளிர்கின்ற அணிகளை யுடையவளாயும்,
உபகத விநயாம் — அடையப்பட் டிருக்கின்ற க...நயத்தை யுடையதாயும், அடையப்பட் டிருக்கின்ற வணக்கத்தை யுடையவளாயும்,
த்யோதமானார்தரேகாம் — ஒளிசெய்கின்ற பொருட்செறிவை யுடையதாயும், ஒளிசெய்கின்ற தனரேகையை யுடையவளாயும்,
கல்யாணீம் — படிப்பவர்களுக்கு மங்களத்தை யுண்டு பண்ணுகின்றதாயும், மங்கள வடிவியாயு மிருக்கின்ற,
மம — அடியேனுடைய,
கவிதா கந்யகாம் — கவனஞ் செய்தலாகிற கன்னிகையை,
க்ருஹாண — ஏற்றுக் கொள்வீராக.

## பொழிப்புரை.

**ஓ உமாபதியே! கன்னிகைக்குரிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியுள்ள, அடியேனுடைய கவிதா கன்னிகையை யணந்து கொள்வீராக.**

ஓம் குஹாய நம:

# கந்தர் திருவிளையாடல்

## "சென்னிமலைச் சிறப்பு"

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அரவரசாகிய ஆதிசேடன் சினத்துடன் சென்று இலக்கஞ் சிகரங்களோடு கூடிய பொன்மேரு கிரியைப் பணாமகுடங்களால் போர்த்து உறுதியுடன் நின்றான். அதுகண்டு உலகங்களெல்லாம் அஞ்சின. இதனை யுணர்ந்த வாயுக்கடவுள் வடவைத் தீயைப்போல சினந்து அண்டமும் திசைகளும் அழியவும், குலமலைகளும் குலுங்கவும் சதாகதி என்ற பெயரை நிலைநிறுத்துவான்போல் மிகுந்த சண்ட வேகத்துடன் மேருகிரியை மூடி நின்ற சேடனைத் தாக்குவானாயினான். இங்ஙனம் வாயுதேவன் இடைவிடா தடர்க்கவும் சேடன் சிறிதுந் தளராது அம் மலையைப் போர்த்து நிற்கும் பிடிப்பு விடாது உறைத்து நின்றனன். சேடன் உறுதியைக் கண்ட வாயுதேவன் ஓர் ஆடலைஉன்னி எல்லா உயிர்களிலுமுள்ள பிராணவாயுவை தன்னுள் ஒடுக்கிக்கொண்டு ஒருபுற மிருந்தனன். அதனால் உயிர்கள் அனைத்தும் பிராணன் ஒடுங்கி அசைவற்று நின்றன. தேவரும் மற்று யாவரும் வாட்டமுற்று, நாரதர் செய்த ஆடலால் விளைந்த விளைவை யுன்னி, திருக்கைலாய மலைபோய், சிவபெருமானைப் பலகாலும் பணிந்து, நிகழ்ந்தவை யாவும் கூறி முறையிட்டு நின்றனர்.

எம்மை யாளுடை எண்டோளீசன் இளநகை புரிந்து "அஞ்சன்மின்" என்றுஅருள்புரிந்து, ஆதிசேடனைக்கடைக் கண்ணால் பார்த்து, "சேடனே! வாயு நமது அஷ்ட மூர்த்தங்களில் ஒருவன். அவனை நயந்திருக்காமல் இங்ஙனம் எதிர்த்து உலகிற்கு ஊறு செய்தல் தகாது" என்று அருள் புரிந்தனர். ஆதிசேடன் "எம்பெருமானே! நினது ஆணையை அடியேன் மறுப்பனோ?" என்று அடங்கி நின்

றனன். அடங்கியதும் வாயுதேவன் அடர்த்து மோதினன். அங்ஙனம் மோதி மூன்று சிகரத்தைப் பறித்துத் தென்றிசைக்கண் கொணர்ந்து வீழ்த்தினன். அதில் ஒன்று சேடன் மகுடத்துடன் கூடி, கொங்குநாட்டில் காவிரியாற்றின் தென்றிசைக்கண் வீழ்ந்தது. அதற்குக் கொடுமுடியென்று பெயர். அங்குள்ள சிவபெருமான் திருப்பெயர் மகுடேச்வரர். மற்றொன்று சேடன் சிரத்துடன் கொங்கு நாட்டில் காவிரியின் கீழ்த்திசையின்கண் வீழ்ந்தது. அது நாககிரி யென்றும், திருச்செங்கோடு என்றும் பெயர் பெற்றது. அதில் சிவபிரான் அர்த்தநாரீ வடிவுடன் எழுந்தருளினர். மற்றொரு மேருவின் சிரம் கொங்கு நாட்டில் நொய்யலாற்றுக்கு வடபால் வீழ்ந்தது. அது சென்னிமலை சிரகிரி யெனப் பலபெயர் தாங்கி நின்றது. இதுதான் அம்மலையின் வரலாறு. மேருமலையின் சென்னி யென்றால் அதன்பெருமை எம்மனோரால் அளவிடற்பாற்றோ? இது கற்ப பேதங்கள் பலவற்றுள் ஒரு கற்பத்தில் நிகழ்ந்தது.

## (புட்பகிரியானது.)

பொன்னுலகத்திலே இந்திரன் மாப்பேரவையில் இனிது வீற்றிருந்தான். கான விஞ்சையர் பாடினர்; கந்தருவர் யாழ்வாசித்தனர்; மின்னற் கொடிபோல் துவண்ட இடையுடைய அயிராணி ஒருபுடை யிருந்தனள்; அரம்பையர்கள் அருகுநின்றனர்; அத் தருணத்தில் இரு தேவப் பெண்கள் அங்கு ஆடுதற்கு வந்தனர். இந்திரனிடம் அநுமதி பெற்று, பரதசாத்திர முறைப்படி காற்சிலம்பு புலம்பவும், இசைக்கருவிகள் இனிது ஒலிக்கவும், கைவழியே கண் செல்லவும் கண்வழியே கருத்து செல்லவும் அரிய நடனம்புரிந்தனர். அதுகண்டு அனைவரும் மகிழ்ந்தனர் அவ்விரு மடந்தையர்க்கும் இந்திரனிடத்தில் காதல் உண்டாயிற்று. கண்களென்ற வண்டைத்தூதாக அனுப்பினர்கள். மனத்தையும் அவனிடம் செலுத்தினர். அமரர் கோமான் அழகின் கொழுந்துகள் போன்ற அவ்விருவரையும் அருகில்

அழைத்து, ஆடை ஆபரணம் முதலியன பரிசுகளாக வழங்கி, சிவபிரான் பிரமனுடைய தருக்கடங்க ஐந்தலை களில் ஒன்றைக் கிள்ளியெறிய, அச்சென்னி ஓடு இரண்டாக உடைந்து வீழ்ந்த தலத்திற்கு ஈரோடு என்று பெயர்; அத்தலத்திற்போய் பிறந்து தவஞ்செய்து வாருங்கள்" என்று குறிப்பினாற் கூறினான். அவர்களும் விடைபெற்றுச் சென்றனர்.

இருவரும் இவ்வாறு இந்திரனால் பணிக்கப்பட்டு, ஈரோடு என்னும் புனிதத் தலத்தில் எழுந்தருளியுள்ள கபாலேசப் பெருமானுடைய திருக்கோயிலில் கைங்கரியஞ் செய்யும் நற்குணமமைந்த ஓர் பரத்தையிடம் வந்து பிறந்தார்கள். அப்பரத்தை அழகே ஓருருக்கொண்டு பிறந்தது போன்ற இருமக்களுக்கும் சிறுநல்லார், பெருநல்லார் என்று பேரிட்டனள்; அருமைபாராட்டி வளர்த்தனள். இலக்குமியே இருவடிவங்கொண்டு வளர்வதுபோல் அவர்கள் சிறந்த கட்டழகுடன் வளர்வாராயினர்.

பாருதித்திடு மிருவரும் பருவங்க டோறும்
சீருதித்திடத் திருவங்க முதித்திடச் சிறந்தே
ஏருதித்திடுஞ் சிறுநல்லார் பெருநல்லா ரென்னும்
பேருதித்திடு மிருவரும் பிறையென வளர்ந்தார்.

கழங்கு ஊசல் சதுரங்கம் அம்மானை முதலிய ஆடல்களை அரிவையரோடு ஆடினர். கல்வி பயின்றனர். நல்லாசிரியரை யடுத்து பரதநாட்டியத்தில் மிகத் தேர்ச்சிபெற்றனர். வண்தமிழும் ஆரியமும் கற்று நிரம்பிய அறிவுடையராய் விளங்கினர். சாம்பூனதம் என்ற மாற்றுயர்ந்த தங்க விக்கிரகம்போல் திகழ்ந்தனர். யாழ் முதலிய இன்னிசைக் கருவிகளைப் பயின்று, கலைமகளும் திருமகளும் நாணுமாறு நலம்பல புனைந்து அழகின் குவியல்கள்போல் இலங்கினர். காண்பார் கண்ணுங் கருத்தும் ஒருங்கே கவருங் கவினுடன் மங்கைப் பருவத்தை யடைந்தனர். இந்திராணியை யொத்தனர். இரதிதேவி [illegible] கண்டு நாணினள்.

(தொடரும்)

உ

முருகா

# கற்பு.

கைலாசமுதலியாரைப் பற்றித் தெரியாதவர்கள் ஒருவருமில்லை; வேளாண் மரபில் பிறந்தவர்; மங்களபுரியில் அவர் ஒரு பெரிய கோடீஸ்வரர்; அவருக்கு இருமனைவியர். மூத்த மனைவிக்கு மூன்று மக்கள்; இளையாளுக்கு நான்கு மக்கள். இளையாளுடைய மக்களுக்குள் கடைசிக் குழந்தை பெண்மகவு. நல்ல சுவர்ண விக்கிரகம் போன்ற அம்மகவை மிகவும் அன்பாகவும் செல்வமாகவும் வளர்த்தார். குழந்தைக்கு மூன்றுண்டு. குழந்தையின் மேல் மூவாயிரம் ரூபாய் பெறுமான பொன்னாபரணம் அணியப்பட்டிருந்தது குழந்தைக்கு காதுகுத்தும் சடங்கு அவர்கள் வீட்டில் மிக விமரிசையாக நடந்தது. 10.000ம் ரூபாய் செலவு. ஏராளமானபேர் உண்டு மகிழ்ந்தார்கள். அன்று மாலை திருவனந்தபுரம் சங்கரிபாய் நடனம். கூட்டம் தாங்கமுடியவில்லை. இவ்வளவு ஆடம்பரமான விசேடத்தில் வருவாரும் போவாரும் அதிகம். இரவுபட்டது திடீரென்று ஒரு பெரிய இடிவிழுந்தது. காதுகுத்தி விசேடஞ் செய்வித்த குழந்தை காணாமற் போய்விட்டது. இந்தப் பேரிடியால் எல்லோருங் கலங்கினார்கள் கைலாசமுதலியார் தலையில் கையை வைத்துக்கொண்டு கண்ணீரினால் உடம்பை நனைத்தார். எங்கும் இதே பேச்சாக இருந்தது. எங்கு தேடியுங் குழந்தை கிடைக்கவில்லை.

செல்வக்குடி என்ற ஊரில் நாகப்பமுதலியார் என்பவர் பரம ஏழை. நல்ல சித்தமுடையவர். நிலங்களை குத்தகைக்குப் பிடித்து உழைத்து உண்பவர். அவருடைய வீட்டிற்கு எதிர்வீட்டில் வாழ்பவர் சிவநேசமுதலியார். அவருக்கும் இவருக்கும் மிகுந்த நட்பு. இருவரும் ஒரேகுலம். ஆனால் பெண்கொடுத்து வாங்குவது இல்லை. மங்களபுரி கைலா[illegible]ருடைய தங்கையை செல்வக்குடி சிவநேச முதலியாருக்குக் கொடுத்திருந்தது.

சிவநேசமுதலியார் சிறிது முன்கோபமுடையவர். அவருக்கு 2 ஏக்கர் நிலம் உண்டு; ஆற்றுக்கால்வாய் பாசனம். உணவுக்குக் குறைவில்லை அவருக்கு ஒரேமகன். அவன் பேர் கதிரேசன். அவன் நல்ல அழகும் அறிவும் உடையவன். பள்ளிக்குத் தவருது செல்பவன். படிப்பில் ஊக்கமுள்ளவன். அடக்கமும் அன்பும் இயற்கையாகவே அவனிடம் பொருந்தியிருந்தன. அவனுடன் சேர்ந்து நாகப்பமுதலியாருடைய புதல்வி செங்கமலவல்லியும் கல்வி பயின்று வந்தனள். செங்கமலவல்லிக்கு வயது பத்து, பள்ளத்தை நோக்கித் தண்ணீர் வருவதுபோல் அவளிடம் நற்குணங்கள் யாவும் வந்து குடியிருந்தன. அவளைக் கண்டால் யாருக்கும் ஒரு தனி யன்பு உண்டாகும். தங்கச் சிலைபோல் விளங்குவாள். உள்ளம் பளிங்குபோல் சுத்தமாக இருந்தது. சிறிதுகூட தீமை அவளிடமில்லை. கதிரேசன் அவளிடம் அன்பாய் பழகி வந்தான். பள்ளியில் இருவருக்கும் ஒரு தனி நட்பு. அடிக்கடி கதிரேசன் செங்கமலத்திடம் பேசி மகிழ்வான். அவளும் அவனிடம் தனக்குத் தெரியாத பாடங்களைக் கற்றுக்கொள்வாள். கதிரேசனுக்கு அப்போது வயது 15. வளர்பிறை மதி போல் இருவருக்கும் நட்பு வளர்ந்தது. கதிரேசன் தனக்கு வீட்டில் தரும் பழம் பட்சணம் முதலியவைகளைக் கொணர்ந்து செங்கமலத்தினிடம் தருவான். செங்கமலம் ஏழைவீட்டுப் பெண்ணானதால் அவள் வீட்டில் ஒன்றும் பதிலாகத் தருவதற் கின்மையால் உள்ளம் வருந்துவாள். ஒருநாள் அவள் வீட்டில் தேன்குழல் செய்தார்கள் அவள் தனக்குக் கொடுத்த தேன்குழலை எடுத்துக் கொண்டு ஓடிவந்து மிக்க மகிழ்ச்சியுடன் கதிரேசனிடம் கொடுத்தாள். கதிரேசன், "செங்கமலம் இது ஏது?" என்று கேட்டான். செங்கமலவல்லி, "எங்கள் வீட்டில் செய்தார்கள்" என்ருள். கதிரேசன் "ஆமாம் உன் தலையில் இருப்பதும் தேன்குழல் தானே?" என்று கேட்டான். (தேன் துளிக்கின்ற மலர்களையுடைய கூந்தல் என்று பொருள்) செங்கமலவல்லி அவனுடைய சொல்வன்மையைக் கண்டு மகிழ்ந்து "அதுசரி; உம்மைக்கண்டு மற்றவர்களைக் கண்டால் எட்டுசிங்கம்போல் தோன்றுகின்றது" என்ருள்: (தமிழில் எட்டு அ. சிங்கம் அதனோடு சேர்ந்தால் அசிங்கம். அவனுக்குமுன் மற்றையோர் அழகு அசிங்கமாக உளது. என்பது குறிப்பு) இப்படி இருவரும் விசித்திரமாகப் பேசுவார்கள்.

செங்கமலவல்லிக்கு வயது 14. மங்கைப் பருவத்தை யடைந்தாள். நாகப்பமுதலியார் அவளை பள்ளியைவிட்டு நிறுத்திவிட்டார். செங்கமல வல்லியைக் காணுமல் கதிரேசனுக்கு பொழுது போகவில்லை. ஏங்கினுன். உள்ளம் புலர்ந்தது. தலை வெடித்து விடும்போலிருந்தது. செங்கமல வல்லியின் உள்ளக்கோயிலிலும் கதிரேசன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தான். ஒவ்வொரு நிமிஷமும் செங்கமலவல்லி கதிரேசனை மனக்கண்ணுல் பார்ப்பாள். ஒருநாள் அவள் தோட்டத்தில் தரைக்கிணற்றில் தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தவள் தவறி விழுந்துவிட்டாள். விழும்பொழுது "கதிரேசா" என்று கதறினுள். அவ்வழியே தற்செயலாய்ப் போய்க்கொண்டிருந்த கதிரேசன் காதில் அக்குரல் வீழ்ந்தது ஓடிவந்து கிணற்றை நோக்கினுன். தனது காதற்கனி அதில் கிடக்கப் பார்த்து, உடனே கிணற்றிலிறங்கி அவளைப் பூச்செண்டுபோல் எடுத்துக் கரைசேர்த்தான். செங்கமலவல்லி தன்னை எடுத்துக் உயிர்ப்பிச்சை கொடுத்த தனது நண்பனைக் கண்டு கரைகாணுத களிப்புற்ருள்.

கதிரேசன்:— தேனு! (தேன்குழல் கொடுத்தநாளிலிருந்து அவள் அவன் அப்படி அழைப்பது வழக்கம்) இதில் எப்படி விழுந்துவிட்டாய்?

செங்கமல:— தவறி விழுந்தேன். தவறுவது யாருக்கும் இயற்கை தானே.

கதி:— ஆமாம். உனது நாவில் தேன் தடவிக்கொண்டு பேசுகின்றனையா? உன்குரல் தேன்போல் தெவிட்டாமல் இனிக்கின்றதே.

செங்:— அது இருக்கட்டும். தாங்கள் இப்போது என்ன படிக்கின்றீர்?

கதி:— நளவெண்பா படிக்கின்றேன்.

. நளனுக்கும் தமயந்திக்கும் அன்னந் தூதுபோயிற்ருமே?

கதி:— ஆம். அன்னத்தின் துணையால்தான் அவர்கட்குத் திருமணம் நிகழ்ந்தது.

செங்:— தங்கட்கும் பிரமாவுக்கும் ஒற்றுமை யதிகமுண்டு என்று கேள்விப்பட்டேனே? நீங்கள் பிரமதேவர்போல் இருக்கின்றீராமே?

கதி:— என்ன அப்படி.

செங்:— பிரமதேவர் அன்னத்தின்மீது ஏறுகின்ருராம். தாங்களும் அன்னத்தைப் பிரியமாக ஏற்றுக்கொள்கின்றீராம். (அன்னம்-சோறு என்ற பொருளில்)

கதி:— (நகைத்து) இன்னும் உன்னுடைய சொல்விஷமத்தை விட வில்லை போலும்.

செங்:— சரி தாங்கள் இங்கு அதிகநேரம் நிற்கவேண்டாம். எங்கள் தாயார் வந்தாலும் வருவாள்.

கதி:— தேனு! உனக்கு விவாகம் எப்போது?

செங்:— (சற்றுநாணி) தங்கட்கு எப்போதோ அப்போதுதான்.

கதி:— நான் வருகிறேன்.

செங்: இன்று இந்தக் கிணற்றிலிருந்து கைதூக்கி எடுத்து என்னைக் காப்பாற்றினீர். இனி காதற்கடலினின்றும் கை தூக்கி எடுத்துக் காப்பாற்றும்.

செங்கமலத்தின் தாய் அங்கு வந்தாள். உடனே கதிரேசன் அவ்விடம்விட்டு நீங்கினான். தாய் "அம்மா! அவன் எங்கு வந்தான்" என்றாள். செங்கமலவல்லி "அம்மா! தவறி கிணற்றில் விழுந்துவிட்டேன். அவர் வந்து எடுத்துக் காப்பாற்றினார்" என்றாள். அவளுக்கு அது நம்பிக்கைப்படவில்லை.

கைலாசமுதலியாருக்கு வயது 63. அவருக்கு அந்த வயதில் சபலமுண்டாயிற்று. நாகப்பமுதலியாருடைய மகளுடைய கட்டழகைக் கேள்வியுற்றார் அவளை மணந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அவரை அலக்கழித்தது. உடனே சிலரைப் பெண் கேட்க அனுப்பினார். அவர்கள்போய் நாகப்பமுதலியாரைக் கண்டு பெண்கேட்டார்கள். நாகப்பமுதலியார். பணவிருப்பத்தால் பெண்கொடுக்க உடன்பட்டார். நாள் நியமித்துவிட்டார்கள். அதனை யறிந்த செங்கமலவல்லி நடுநடுங்கினாள். அவளுக்கு உலகமே சுற்றுவதாக தோன்றிற்று. "முருகா! வள்ளிமணாளா! என் மனக்கோயிலில் கதிரேசர் குடிபுகுந்துள்ளார். இனி அங்கு வேறு ஒருவருக்கும் இடமில்லை. இப்போது வயது தளர்ந்த ஒரு கிழவனுக்கு என்னைத்தர இணங்கினரே. என்செய்வேன். அன்று கிணற்றில் விழுந்தேனே. இறந்திருந்தால் ஒருபாடாக முடிந்திருக்கும். அந்தோ! என்வாழ்வு மாளிகையில் இடி விழுந்துவிட்டது. உன் திருவருளைத்தவிர வேறு துணையில்லை" என்று புலம்புவாள்.

பிறகு தாயைநோக்கி, "அம்மா! நான் எதிர்வீட்டுக் கதிரேசரைத் தவிரவேறு ஒருவரையும் மணந்துகொள்ள மாட்டேன். இது சத்தியம். வீணே என் வாழ்வைக் கெடுக்கவேண்டாம்" என்றாள். தாய் அவ்விஷயத்தைத் தன் கணவனுக்குத் தெரிவித்தாள். நாகப்பன் "பெண்ணே! கைலாசமுதலியார் பெரிய செல்வச் சீமான் அவரே வலிதில் நமது மகளைக் கேட்பது நாம் செய்த புண்ணியம். செங்கமலவல்லி நமக்கு வளர்ப்புப் புதல்விதானே. அவள் என்ன குலம், என்ன மரபு என்பதும் ஒன்றுந் தெரியவில்லை அவளை யாரும் மணந்துகொள்ள மாட்டார்கள் கடவுள் கருணையால் கைலாசமுதலியார் கேட்டார். அவருக்குக் கொடுத்துவிடுவதுதான் நலம். அவர் வயதானவராயினும் குற்றமில்லை. 2. 1. வருடம் வாழ்ந்தாலும் போதும். பணத்தோடு மகள் திரும்பி வீட்டிற்கு வருவாள்" என்றான்.

கதிரேசன் தனது காதற்கிளியை வேறு ஒருபூனை வசப்படுவதைக் கேட்டு துடிதுடித்தான். அவளைத் தான் மணந்துகொள்ள வேண்டுமென்று தாய் தந்தையரிடம் குறிப்பாகக் குறிப்பிட்டான். சிவநேசமுதலியார். "மகனே! செங்கமலவல்லி நாகப்பருடைய சொந்தமகளன்று. யாரோ கொண்டுவந்து கொடுக்க வளர்ந்தவள். என்னகுலமென்று தெரியாது. அவளை நாம் மணந்துகொண்டால் குலத்தார்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். கைலாசமுதலியார் பெருந் தனவந்தர். அவருடைய பணம் எதைச் செய்தாலும் மறைத்துவிடும். நாமோ ஏழைகள். ஆதலால் அதனை மறந்துவிடு" என்று இனிமையாகக் கூறினார். கதிரேசன் சிறந்த அறிஞன். தந்தை சொல்லைத் தடுக்க அஞ்சிவாளாவிருந்து விட்டான்.

கலியாணநாள் நெருங்கிக்கொண்டு வந்தது. வரவர செங்கமல வல்லிக்கு உள்ளம் பதறிக்கொண்டே இருந்தது. முருகன் திருவருளை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகினாள். கண்களில் ஆறுபோல் நீர்பெருகி அவள் இருந்த இடத்தில் தேங்கியது' கலியாண நாளைக்கு முன்னாள் மேளங்கள் முழங்க செங்கமலவல்லி பல்லக்கில்வந்து மங்களபுரி சேர்ந்தாள். பெண்வீட்டுக் காரர்க்குத் தனிவிடுதி தரப்பட்டிருந்தது. பெண்ணுக்கு விலையுயர்ந்த சேலையும் ஆபரணங்களும் கைலாசமுதலியார் அனுப்பினார் அவைகளால் செங்கமலச் செல்வியை யலங்கரித்தனர். கைலாசமுதலியார் பெண்வீட்டார் தங்கியுள்ள விடுதிக்கு வந்

தார். இவர்தான் மாப்பிள்ளையென்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். ஜன்னலின் வழியே செங்கமலச்செல்வி அவரைப் பார்த்தாள். மனம் பகீர் என்று பற்றியது. வெள்ளிக்கம்பி போன்ற தலைமயிரையும் நடுவே வழுக்கை விழுந்த தலையையும், கையிலுள்ள தடியையும் பல் ஒன்றுகூட இன்றி கலியாணத்திற்கென்று கட்டிய பல்லையும் ஒட்டியுள்ள தவடையையும், திரைந்துள்ள உடம்பையும் கண்டால் யாருக்குத்தான் வயிறு பகீர் என்று பற்றி எரியாது? "முருகா! இந்தக் கிழவனா எனக்குக் கணவன். ஐயோ! என்னே என் விதி? பாழும் பணமே! நீ என்ன தான் செய்யமாட்டாய்? உனக்கு இருக்கும் பெருமையே பெருமை பணமே! நீ ஒருவனிடமிருந்தால் புத்தியைக் கெடுப்பாய். வருஷத்திற்கொரு கல்யாணம் செய்துக்கொள்ளச் செய்வாய் கொலை, புலை, பொய் முதலிய எல்லாப் பாவங்களையும் அஞ்சாமல் செய்யச் செய்வாய். ஏ பாரததேவி! உன் வயிற்றிற் பிறந்த இளம்பெண்களை கிழப்பிணங்களாகிய கிணற்றில் தள்ளும் கொடிய வழக்கம் என்றுதான் ஒழியுமோ? அந்தோ! உலகமறியாத சிறுமிகளை உடல்முழுவதும் நரைத்துத் திரைத்த கிழவர்களிடம் தள்ளுவதைவிடக் கடலில் தள்ளலாமே! பாரததேவி! உனக்குக் கருணையில்லையா? நான் உன் மகளல்லவா? என் வாழ்வென்னும் மாளிகையில் இக்கிழப்பேய் என்னும் இடிவிழுந்ததே" என்று பலவாறு புலம்பி கண்ணீரை வடித்தாள்.

கைலாசமுதலியாருடைய வீட்டில் வருகின்றவர்களை வரவேற்பதும், சமைப்பதுமாக, "வாருங்கள்", இருங்கள், சுகமா, எப்போது வந்தீர்கள், சாப்பிடுங்கள்" என்ற சத்தங்களும் நிரம்பி இருந்தது. மாமன் கல்யாணத்திற்கு கதிரேசனும் அவன் தாய் தந்தையரும் வந்திருந்தார்கள் கதிரேசன் பெண்வீட்டார் விடுதிக்கு வந்தான் அங்கு துன்பக்கடலில் ஆழ்ந்துள்ள தன் காதற்களஞ்சியத்தைக் கண்டான். தனது அன்புக்கடலை செங்கமலவல்லி கண்டாள். தன்னையறியாமல் அவள் கண்களில் பல நீர்முத்துக்கள் உதிர்ந்தன. இருவருடைய கண்களும் ஏதோ பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டன.

கலியாண தினத்தன்று காலை பூர்வசடங்கு நடந்தது. மாப்பிள்ளை கைலாசமுதலியாரைப் பல நண்பர்கள் வந்து பார்த்துப்

பேசினார்கள். கைலாசமுதலியாருக்கு தளர்ந்த வயதில் மணஞ் செய்துக் கொள்வதுபற்றி நாணம் ஒருபக்கம். இளம்பெண்ணை யடைவதுபற்றி மகிழ்ச்சி ஒருபக்கம் 'எனக்கு ஒன்றும் கல்யாணத்தில் விருப்பமில்லை. நண்பர்கள் சேர்ந்து இப்படிச் செய்கிறார்கள். ஊழ்வினை யாரைவிட்டது?'' என்று நண்பர்களிடம் வேதாந்தம் பேசினார் அவருடைய பேரன் பேத்திகள் யாவரும் "தாதாவுக்குக் கல்யாணம்" தாதாவுக்குக் கல்யாணம்" என்று கேலிபண்ணிக் கொண்டிருந்தார்கள். சிலர், "இந்த வயதிலா கல்யாணம்? என்ன பெண்கிறுக்கு? ம...... பணம் பண்ணுகினறது" என்றார்கள். சிலர், "ஐயோ! பாவம் இளம்பெண் அவளைக் கொணர்ந்து இந்தக் கிழவருக்குக் கொடுக்கின்றார்களே அந்தப் புண்ணியவான்களைச் சொல்லவேண்டும்" என்பார் சிலர். பித்த நரைதான். அப்படி ஒன்றும் அதிக வயதாய்விடவில்லை. 70 வயதில் சிலர் கல்யாணம் செய்து கொள்கிறார்களே அதற்கு இது மேல்தான். என்னமோ அவர் இஷ்டம்" என்பார் சிலர். என்ன பாவஞ் செய்தாளோ அந்தப்பெண் இந்த கிழஎருமையை மணந்துகொள்ள அவள் தலைஎழுத்து; விதி யாரைவிடும்?" என்பார் சிலர். அவருடைய மகள்போலிருக்கின்றாள் பெண்ணைக் கொடுக்க இசைந்தார்களே அவர்கள் தலையில் இடிவிழாதா? என்பார் சிலர். சிறு பெண்களை கிழப்பிணங்கட்குக் கொடுக்கும் இக்கொடிய மறச்செயல் ஒழிந்தாலன்றி நமது நாட்டுக்கு விமோசனம் உண்டாகாது" என்பார் சிலர்.

பெண்ணாய்ப் பிறத்தல் பேருலகில் பெரியபாவம் என்பார்வாட்
கண்ணார்க்கில்லை கதியென்பார் கடவுள்கேட்கு மினியென்பார்
புண்ணாய் நெஞ்சம் புழுங்குமென்பார் புலைமாதரை மூப்பினர்க்கீதல்
மண்ணாய்ப் போக மதிதவிரில் வழக்கமென்பார் மறுகிடுவார்.

மணமகள் வாடியமுகத்துடன் மௌனத்துடன் வந்து மணவறையில் அமர்ந்தனள். மாப்பிள்ளை மிகுந்த மகிழ்ச்சியுடன் வந்து அமர்ந்தனர். திருமாங்கல்யம் எடுத்து எல்லோருக்கும் காட்டிக்கொண்டிருந்தனர். செங்கமலவல்லி யுள்ளமும் தலையும சுழன்றது கதிரேசன் அதுகண்டு மனங்கவன்றான். திடீரென்று ஆங்கு ஒருவன் நுழைந்தான். 'நில்லுங்கள் நில்லுங்கள்" என்று இடிஇடித்தாப்போல் கூக்குரலிட்டான். சபையிலிருந்தோர் யாவரும் அவனை உற்று நோக்கினர். அவன் கரிய உருவமும், பருத்த உடம்பும் முறுக்கிய மீசையும் பெரியகுரலும் உடையவ

ளுக இருந்தான். அவன் சபையாரையும். மணமக்களேயும் பார்த்துப் பின்வருமாறு பேசலாயினுன்.

அன்பர்களே! நான் அடுத்த மலேச்சேரி: என்பெயர் காத்தப் பெருமாள் 15 ஆண்டுகளுக்குமுன் என் தாயாருக்கு உடல் நலங் குன்றி பாயும் படுக்கையுமாக ஆனுள். வைத்தியர் பெருந் தொகை கொடுத்தால் குணப்படுத்துவேன் என்றுர். என்னிடம் பண த்திற்கு வழியில்லே. தாயைக் காப்பாற்றவேண்டிய கடமை என்னே மிகவும் வருத்தியது. பலப்பல சிந்தனே வந்து என்னே அலக்கழித்தது. அப்போது நான் இங்கு கைலாசமுதலியார் வீட்டில் நடந்த குழந்தையின் காதுகுத்தும் விசேடத்திற்கு வந்திருந்தேன. காதுகுத்திய குழந்தையின்மேல் நகைகள் மிகுதியாகக் கணடேன் தாயைக் காப்பாற்றும் பொருட்டு அன்றிரவு குழந்தையைக் களவுசெய்துகொணடு போனேன். அந்த நகைகளே விற்றுத் தாயை நோயைவிட்டு நீங்கச் செய்தேன். பிறகு அந்தக் குழந்தையை செல்வக்குடி நாகப்பமுதலியார் இதோ இங்கு சம்பந்தியாக இருக்கின்றுரே இவரிடங் கொடுத்து வளர்க்கச் சொன்னேன். அவருக்குக் குழந்தையில்லாமையால் அன்போடு வளர்த்து வநதார். நானும் அடிக்கடி கணகாணித்து வந்தேன். பிறகு இப்போது நான ஒருமாதமாக ஊரில் இல்லே. திடீர்என்று வந்தேன. இந்த செய்திகேட்டு ஓடிவந்தேன். இங்கே மணமகளாக அமர்ந்திருக்கும் செங்கமலவல்லிதான் கைலாசமுதலியாருடைய மகள். என்ஞல் தாய்க்குறையகற்றக் கொண்டுபோனவள். இப்போது பிதாவை மணக்க ஏற்படுகின்றது'' என்று கூறி கண்ணீர் வடித்தான்.

சபையில் இருந்த யாவரும் ஆச்சரியப்பட்டனர். மாப்பிள்ளேயாக இருந்த கைலாசம்பிள்ளே. வெட்கி மகளே எடுத்துத் தழுவி, ''அம்மா! என செல்வக் குழந்தாய்! உன்னேக் காணும் பாக்கியம் பெற்றேன்'' என்று கணகலுழ்ந்தார். செங்கமலச் செல்வியும் பிதாவை வணங்கி கண்ணீரிஞல் திருவடியை யலம்பிஞள். அவளேப் பெற்ற அன்னேயும் ஏனேயோரும் வந்து புலம்பி மகிழ்ந்தார்கள். திருமணவீடு இப்படி பெருமாறுதலே யடைந்தது.

பின்னர் அதே திருமணப் பந்தலில். கைலாசமுதலியார் தனது மகள். செங்கமலவல்லியை தனது தங்கைமகன் கதிரேசனுக்கு அதே லக்கினததில் கன்னிகாதானஞ் செய்து கொடுத்தார். கதிரேசன் இப்படி நடக்குமென்று கனவிலும் நினேக்கவில்லே. செங்கமலவல்லி தனது காதற் கருவு[illegible] தனக்குக் கணவஞகச் செய்து அருள்புரிந்த முருக[illegible] முழுமனதுடன் சிந்தித்தாள். கல்யாணத்திற்கு வந்திருந்[illegible] எல்லாம் ஒரே

ஆரவாரமாக இதே பேச்சாகப் பேசி. "இனியாவது தமிழுலகம் இப்படி வயது முதிர்ந்தவர்கள் இளஞ் சிறுமிகளை மணந்து கொள்ளும் கொடுஞ்செயலை ஒழித்து நலமுறுக" என்று பல முறை சொல்லிக்கொண்டே விருந்தருந்தி தத்தம் இருக்கை சேர்ந்தார்கள். செங்கமலவல்லியும் கதிரேசனும் இன்புற்று வாழ்ந்தார்கள்.

---

## திருப்புகழ் ஸ்வரம்.

**இராகம்: காபி.** **தாளம்: ஆதி.**

**(22-வது மேளம்)** ஆ. ஸரிகம பநிஸ.

அ. ஸதநிப மபதநிபமரிகமரிஸ.

| | | |
|---|---|---|
| த நி ஸ்ா ஸ் ஸ்ா ஸ் | ப த நீ | நி நீ த |
| விறல் மா ர னைந்து | மலர் வா | ளிசிந்த |
| ம ப தா நி பா ம | க ம பா | பா ; |
| மிக வா னிலிந்து | வெயில் கா | ய . |
| ப த நீ நி நீ த | ம ப தா | நி பா ம |
| மிதவா டைவந்து | தழல்போ | லவொன்ற |
| க ம பா ப மா ரி | ஸ ரி க ம | ரி ஸ ஸா |
| வினைமா தர் தந்தம் | வசைகூ . | . . ற |

---

## தீபாக்கினிச் சூரணம்.

சுக்கு பலம் கால் சீரகம் பலம் அரை
மிளகு ,, கால் இந்துப்பு ,, கால்
திப்பிலி ,, கால்

இவைகளை வறுத்து பொடித்து, தேன் அல்லது எலுமிச்சம்பழச் சாற்றில் 2 பைசா எடைசேர்த்து உண்டால், ஜீரண உறுப்புக்களைப் பலப்படுத்தி, ஜீரண சக்தியை அதிகப்படுத்தும்.

உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

## வ. ரு. புருஷோத்தம செட்டியார்

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்)
நெ. 47, சைனுபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை, மதரூஸ்.

---

## வெகு சரசம்! உத்திரவாதம்!!

எங்கள் சொந்த தரியில் தயார் செய்யும்

## பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை.

## பட்டு-சேலை தினுசுகள்

## சாயத்திற்கும் ஜரிகைக்கும்

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

## எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார், எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---

நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.

## நஞ்சன்கூடு பல்பொடி

பல் வியாதிகளைத் தடுக்கவும், குணப்படுத்தவும்

| | | |
|---|---|---|
| ஊக்கம், உற்சாகம் ஊட்ட | ஜீரகம் | அஜீரண, பித்த சமனி |
| உஷ்ண சமனி | கூவாயில் | |

## ஸ்ரீசா கஸ்தூரி கோரோஜன மாத்திரை

ஸோல்ஏஜண்ட்ஸ் யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ்.

தந்தி விலாசம் "சேமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மங்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைவ்ஸ் வைரம். பேசரி சைவ்ஸ் வைரம்.
1-க்கு 0—8—0. 1-க்கு 0—6—0.

கிடைக்குமிடம்:---

மோதிரங்கய்ய செட்டியார் சன்ஸ்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga KIRUPANANDAVARI; Printed & Published by M. MADHUSOODANA SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi N. A